ஓய்வூதிய சுற்றறிக்கை இல: 02/2021

எனது இல. ஓ.தி./சுற்றறிக்கை/2021
ஓய்வூதிய திணைக்களம்
மாளிகாவத்தை
கொழும்பு 10
17.06.2021

பொலிஸ் மா அதிபர்
அனைத்து மாவட்ட செயலாளர்கள் மற்றும்
பிரதேச செயலரலர்களுக்கு

**கடமையில் ஈடுபட்டிருந்த வேளையில் பயங்கரவாத நடவடிக்கைகளால் காயமடைந்து ஊனமுற்று மருத்துவ காரணங்களால் ஓய்வு பெற்ற பொலிஸ் வீரர்களுக்கும், செயல்பாட்டு பகுதிகளில் உள்ளபோது பயங்கரவாத நடவடிக்கைகளால் காலமான இலங்கை பொலிஸ் வீரர்களின் விதவை மனைவியருக்கும் ரணவிரு சுரக்கும் கொடுப்பனவினை வழங்குதல்.**

அமைச்சரவை பத்திர இல அ.ம.ப. 18/0317/748/009 மற்றும் 05.09.2018 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி இலங்கை பொலிஸ் ஊழியர்களுக்கு கிடைக்கப்பெறவேண்டிய ரணவிரு சுரக்கும் கொடுப்பனவு பின்வரும் விதிகளின்படி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

02. பயனாளிகளாக தகுதியானவர்கள்

I. கடமையில் ஈடுபட்டுள்ள நிலையில், பயங்கரவாத நடவடிக்கைகளால் ஊனமுற்ற, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 21/88 இன் பிரகாரம் 55 வயது வரை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைப் பெற்ற, 55 வயதில் ஓய்வூதியம் திருத்தியமைக்கப்பட்ட இலங்கை பொலிஸ் ஊழியர்கள்.

II. மேலே (I) இல் குறிப்பிடப்பட்டவாறு ஓய்வூதியம் பெறுகின்ற வேளை, காலமான பொலிஸ் ஊழியர்களின் விதவை மனைவி அல்லது 26 வயதுக்குட்பட்ட பிள்ளைகள்.

III. கடமையில் ஈடுபட்டு இருந்தபோது பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக காலமான, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 21/88 இன் பிரகாரம் சலுகைகளுக்கு உரித்துடைய, திருமணமான பொலிஸ் வீரர்களின் விதவை மனைவி மற்றும் 26 வயதுக்குட்பட்ட பிள்ளைகள்.

03. பொலிஸ் ரணவிரு சுரக்கும் கொடுப்பனவு கணக்கிடும் போது 55 வயதில் உள்ள அடிப்படை சம்பளம் மற்றும் ஓய்வூதிய கணக்கீட்டிற்கான அடிப்படை கொடுப்பனவுகள் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். அவ்வாறு கணக்கிடப்பட சம்பளத்தின் அடிப்படையில் அதிக பட்ச 15% ரணவிரு சுரக்கும் கொடுப்பனவாக வழங்கப்பட வேண்டும்.

04. ஒரு அலுவலரின் ஓய்வூதியத்தை கணக்கிடும்போது, குறைக்கப்படாத ஓய்வூதியத்தின் சதவீதம் 85% க்கும் குறைவாக இருந்தால், அந்த அலுவலரின் ஓய்வூதியம் 85% ஆக திருத்தப்பட வேண்டும்.

05. பொலிஸ் ரணவிரு சுரக்கும் கொடுப்பனவு மற்றும் ஓய்வூதியத்திய சம்பளத்தின் கூட்டுத்தொகை ஒருபோதும் ஓய்வூதியம் கணக்கிடப்படும் அடிப்படை சம்பளம் மற்றும் ஓய்வூதிய உரித்துள்ள கொடுப்பனவு தொகையை விட அதிகமாக இருக்கக்கூடாது.

06. பணிக்கொடை கொடுப்பனவு மற்றும் ஓய்வூதிய உரிமம் பெற்றுக்கொள்ளும் போது தற்போதுள்ள விதிமுறைகள் தொடர்ந்து அவ்வாறே வலுவிலிருக்கும்.

07. மறுமணம் செய்த விதவைகள் / தபுதாரர்களுக்கு இந்த கொடுப்பனவினை பெற உரிமை கிடையாது.

08. 27.04.2021 க்குப் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் MOD / 01/2021 இலக்க மற்றும் 1821.05.18 திகதிய சுற்றறிக்கையின் படி நிலையான மாதாந்த கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் பொலிஸ் ரணவிரு சுரக்கும் கொடுப்பனவு நிறுத்தப்பட வேண்டும். மேலே 2 (i), (ii) மற்றும் (iii) கீழ் தகுதி பெற்றவர்களுக்கு 01.01.2017 முதல் 26.04.2021 வரை (ஏப்ரல் 2021 மாதம் உட்பட) பொலிஸ் ரணவிரு சுரக்கும் கொடுப்பனவு வழங்கப்படும்.

09. மேற்குறிப்பிட்ட விதிமுறைகளின்படி, பொலிஸ் ரணவிரு சுரக்கும் கொடுப்பனவுக்கு தகுதியான பொலிஸ் வீரர்கள் மற்றும் இறந்த பொலிஸ் வீரர்கள், 55 வயதில் பெறும் சம்பள விபரங்கள் பொலிஸ் திணைக்களத்தினால், ஓய்வூதியம் வழங்கப்படும் பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். மேலே உள்ள பிரிவு 8 இன் படி நிலுவைத் தொகை மட்டுமே செலுத்தப்படுவதால், பொலிஸ் ரணவிரு சுரக்கும் கொடுப்பனவுக்கான விண்ணப்பங்கள் "Arrears Source Document" இன் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அங்கு Reason ஆக Police Surakum Allowance Arrears தெரிவு செய்ய வேண்டும். 55 வயதில், திருத்தப்பட்ட ஓய்வூதிய கொடைப் பத்திரம் (விதவைகளுக்கு எனில், சம்பள அதிகரிப்பு அறிக்கை மற்றும் விதவையின் சான்றிதழ்) மற்றும் கணக்கீட்டு ஆவணங்கள் இணைப்புகளாக இணைக்கப்பட வேண்டும்.

10. பொலிஸ் ரணவிரு சுரக்கும் கொடுப்பனவு வழங்கப்பட்ட பின்னர், அது குறித்த அறிக்கை ஓய்வூதிய கோப்பில் சேர்க்கப்பட வேண்டும் என்பதுடன் அதன் நகலை ஓய்வூதியருக்கு வழங்க வேண்டும்.

11. இந்த சுற்றறிக்கையானது அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதலுடன் வெளியிடப்பட்டுள்ளது.

**ஒப்பம். ஏ. ஜகத் டீ டயஸ்**
**ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்**

பிரதிகள்

| | | |
|---|---|---|
| 01 | ஜனாதிபதியின் செயலாளர் | - த.த.த. |
| 02 | பிரதமரின் செயலாளர் | - த.த.த. |
| 03 | செயலாளர், அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | - த.த.த. |
| 04 | செயலாளர், நிதி அமைச்சு | - த.த.த. |
| 05 | செயலாளர், பாதுகாப்பு அமைச்சு | - த.த.த. |
| 06 | கணக்காய்வாளர் நாயகம் | - உ.ந.எ |